தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, ஏப்ரல் 8, வெள்ளிக்கிழமை

பங்குனி 25, ஸ்ரீமுக-திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை".

காலந்தாழ்த்திச் செய்யவேண்டிய செயல்களைக் காலந் தாழ்த்தியே செய்யவேண்டும்; காலந்தாழ்த்தாது செய்யவேண்டிய செயல்களைக் காலந்தாழ்த்தாது விரைந்து செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 221, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

221–

திருச்சி மத்திய சிறையில் பெண் கைதிகளுக்குத் தனி இடம் ஒதுக்குதல்

***21715– திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருச்சி மத்திய சிறையில் பெண் குற்றவாளி கைதிகளுக்குத் தனியே இடம் ஒதுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏதுமில்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மத்திய சிறையில் பெண் குற்றவாளி கைதிகள் தனியாக மத்திய சிறைக்கு அப்பாற்பட்டு, வெளியிலே ஒரு இடத்திலே அடைக்கப்படுகிறார்கள். ஆனால் சென்னையிலே இருப்பதைப் போல அங்கே திருச்சி மத்திய சிறையிலும் பாதுகாப்பாக பெண்களுக்கு சிறை தனியாக வைத்தால் வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே அரசு மீண்டும் பரிசீலித்து சென்னையில் இருப்பதைப் போல திருச்சியிலும் அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல சென்னையில் தனியாகப் பெண்களுக்கு சிறை கிடையாது. தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில், (1) மதுரை, (2) வேலூர் ஆகிய இடங்களில்தான் பெண்களுக்கு என தனிச் சிறைச்சாலைகள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட்டு அங்கே அனுப்பப்படுகிறார்கள். அதுவரையில் திருச்சியிலேயே ஒரு தனி கிளைச் சிறை (சப் ஜெயில்) இருக்கிறது, அங்கேதான் டிரையல் பிரிசனர்- ஆக வைத்து தண்டிக்கப்பட்ட பிறகு வேலூருக்கோ அல்லது மதுரைக்கோ அவர்களை அனுப்புவது வாடிக்கையாக இருக்கிறது. எனவே இதற்கு அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. வேலையா.

திரு. டி. வேலைய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, victims of criminal act-என்று வருகிறபோது they are victims என்கிற போது அவர்களை, தவறிழைத்த பெண்களோடு சேர்த்துத்தான் வைக்கிறார்கள். அவர்கள் இந்தக் குற்றவாளிகளோடு வைக்கப்படுகிறபோது, அதிலும் கடத்தல், கற்பழிப்பு போன்ற வழக்குகளில் உள்ள இளம்பெண்களை இப்படிப்பட்ட குற்றவாளிகளோடு வைக்கும்போது அவர்களுடைய மன நிலை பாதிக்கப்படுகிறது. அவர்களுடைய கௌரவமும் பாதிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்காக இப்படிப்பட்ட வழக்கு நடவடிக்கையில் உள்ள பெண்களைத் தனியாக வைப்பதற்கு அரசாங்கத்தில் இதுவரை எந்தவிதமான ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. அதை நமது உயர்நீதிமன்றமும் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களை, குற்றம் இழைத்தவர்களோடு வைக்கக்கூடாது என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட குற்றத்திலே பாதிக்கப்படுகின்ற பெண்களைத் அந்த வழக்கு முடிகிற வரை தனியாக வைக்கவேண்டுமென்றும், இல்லங்களில் வைக்கவேண்டுமென்றும் சில நேரங்களில் நீதிமன்றங்கள்

உத்தரவிடுகின்றன. அப்பபடிப்பட்ட சூழ்நிலையில் இவர்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு ஒரு இடம் ஏற்பாடு செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய விபரம் என்னிடத்திலே இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உணர்வுகளை உரிய அதிகாரிகளோடு கலந்து பேசி, மேலும் அவர்கள் நீதிமன்றத்திலே இதைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்ன காரணத்தாலே அந்த நீதிமன்றத் தீர்ப்புகளையும் பார்த்து என்ன ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமோ அந்த ஏற்பாடுகளை உவந்து செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குற்றவாளிகளில் சிலர் சில நேரங்களில் கைக்குழந்தைகளோடு வருகிறார்கள், கர்ப்ப ஸ்திரீகளாகவும் வருகிறார்கள். அப்படி வருகின்றவர்களை இங்கெல்லாம் அனுப்பாமல் மற்ற பெண் கைதிகளுக்கு என்று இருக்கக்கூடிய சிறைகளுக்கு நேரடியாக அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அவர்களைத் திருச்சி, சென்னை போன்ற இடங்களுக்கு அனுப்பாமல் நேரடியாக அந்தப் பெண் கைதிகள் தங்குவதற்கான இடம் எங்கு இருக்கிறதோ அங்கே அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி போன்ற தனி கிளைச் சிறைகள் அல்லது பெண்களுக்காக இருக்கிற இடங்கள் அங்கே இல்லையென்றால் உடனடியாக அவர்கள் மதுரைக்கு அருகில் இருந்தால் மதுரை என்றும், வேலூருக்கு அருகில் இருந்தால் வேலூருக்கும் அவர்களை அனுப்புகின்ற நடைமுறையை அரசு இன்றைக்குக் கையாண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

முற்பகல் 10–05

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே பெண்களுக்காக தனிச் சிறைச்சாலை வேலூரில் மட்டும்தான் இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கு என்று தனிச் சிறைச்சாலை ஏற்படுத்த அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிச் சிறைச்சாலை உருவாக்குகின்ற அளவுக்கு பெண் குற்றவாளிகள் உருவாகவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரையிலும் வேலூரிலும் தண்டிக்கப்பட்ட பெண் கைதிகளுக்கு அங்கே இடம் ஒதுக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். நீலகிரி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களுக்கு கோயம்புத்தூரில் அந்தமாதிரி பெண்களுக்கு என்று தனிச் சிறைச்சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல வேலூர், மதுரை ஆகிய இரண்டு இடங்களிலே போதுமான வசதியும் வாய்ப்பும் இருக்கிறது. எனவே, புதியதாக சிறைச்சாலை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 222, திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக திருமதி ஏ.எஸ், பொன்னம்மாள், பேசுகிறார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

222–

அரசு அச்சகத் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு இரவு நேரப்படியை உயர்த்துதல்

**11245–*திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

அரசு அச்சகங்களில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இரவு நேரப்படி மற்றும் பன், டீ-க்கான படி ஆகியவற்றை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுக்கும்.